**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் - 2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம் 07 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் அவை இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களின் போது இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டிற்குரிய பணிக்க்கொடைக் மிகைக் கட்டண செலவினம், சுத்திகரித்தல் செலவினம், பாதுகாப்பு செலவினம் மற்றும் மின்சாரம் மற்றும் தொலை பேசி செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,563,677 கணக்கீடு செய்யப்படாமையின் | சகல அட்டுறு கொடுப்பனவுகளும் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் நடப்பாண்டின் போது மிகைக் கட்டணம் செலுத்தப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களை உறுதிப்படுத்துவதற்கு முன் நியம இலக்கம் 01 இன் பிரகாரம் அட்டுறு அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் அவை இடம்பெறுகின்ற சந்தர்ப்பத்தின் போது இனங்கண்டு கணக்கீடு செய்யப்படுவதை கணக்காளரால் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக அப்பெறுமதியால் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்தும் மற்றும் மிகை அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி இலக்கம் 65 இன் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகக்குறைந்தது ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் காலப் பகுதியின் இறுதித் திகதியின் போது மீளாய்வு செய்ய வேண்டியிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட நிலைமையில் மதிப்பீடுகளின் மாற்றங்கள் ஏற்படுமாயின் அந்த மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடொன்றின் மாற்றமாக கருதி கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தால் மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா 11,904,168 ஆன 38 வாகனங்களுக்கு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது கணக்கீடு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டதுடன் தங்காளை நிறுவனத்தின் கட்டிடம் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மதிப்பீட்டுத் திணைக்களம் ஊடாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை உறுதிப்படுத்துவதற்கு முன் நியம இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு வருடத்தின் அறிக்கையிடல் காலப் பகுதியின் இறுதியின் போது மீளாய்வு செய்வதற்கும், மதிப்பீட்டு மாற்றங்கள் காணப்படுமாயின் அவற்றை சரியாக கணக்கு வைப்பதையும் கணக்காளரால் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி இலக்கம் 92(ஆ) இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் அண்ணளவான இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் நிறுவனம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடும் பேணிச்செல்லப் பட்டிருக்கவில்லை. | முழுமையாக பெறுமானம் செய்யப்பட்டு எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் இழிவுப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்கு அனுபவமுள்ள உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளதுடன் அந்தப் பணிகள் 2024 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களை உறுதிப்படுத்துவதற்கு முன் நியம இலக்கம் 07 இன் பிரகாரம் முழுமையாக தீர்வு செய்யப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்களுக்குரிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதை கணக்காளரால் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பந்தி இலக்கம் 61, 65 மற்றும் 67 இன் பிரகாரம் நிறுவனமொன்றினால் குறித்துரைத்த நலன் திட்டம் (Defined Benefit Plan) இற்காக கணக்கு வைக்கும் போது ஆயுட்கால தொழில்நுட்ப முறைமை (Actuarial | ஆயுட்கால அறிக்கையை தயாரித்து கட்டுப்பாட்டுச் சபையின் அறிக்கையொன்று தயாரித்து நிறுவனத்தின் ஆளுகைச் சபைக்கு அனுப்பி அதன் அங்கீகாரம் பெற்றுக் | நிதிக்கூற்றுக்களை உறுதிப்படுத்தவதற்கு முன் நியம இலக்கம் 19 இன் பிரகாரம் நிறுவனம் ஒன்றினால் குறித்துரைத்த நலன் திட்டத்தின் பெறுமதியை மதிப்பிடு வதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | Techniques) பயன்படுத்தி அறிக்கையிடப்படுகின்ற திகதியில் குறித்துரைத்த கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி தீர்மானிக்கப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்ட போதிலும் ரூபா 324,972 ஆன பணிக்கொடை ஒதுக்கீடுகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொண்ட பின்னர் விஷேட நிபுணர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக முறையான கூறுவிலை கோரப்பட்டதன் பின்னர் பொருத்தமான விஷேட நிபுணரின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஆயுட்கால தொழில்நுட்ப முறைமை பயன்படுத்தப்படுவதை கணக்காளரால் உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் பந்தி இலக்கம் 18 மற்றும் 19 இற்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்காக இனங்காண வேண்டிய ரூபா 21,583,203 கற்பனைச் சொத்தாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் கற்பனைச் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்தும் செலவினங்கள் குறைத்தும் குறிப்பிடப்பட் டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் மீண்டும் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை உறுதிப்படுத்தவதற்கு முன் நியம இலக்கம் 20இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் கற்பனைச் சொத்துக்களின் கருத்தை உள்ளடக்காத செலவினங்களாக குறிப்பிடப்படுவதை கணக்காளரால் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 04 நிலையான வைப்புக்களுக்குரிய வட்டி வருமானம் ரூபா 47,089,885 ஆக குறிப் பிடப்பட்டிருந்த போதிலும் வங்கி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் கண்காய்வினால் கணக்காய்வு செய்யப்பட்ட வட்டி வருமானம் ரூபா 37,309,482 ஆனதன் காரணமாக மீளாய்வாண்டின் வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 9,780,403 அதிகரித்து குறிப்பிடப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக் காணப்படுகின்ற வங்கி யிலிருந்து உரிய விபரங்களை மீண்டும் பெறப்பட்டுள்ளதுடன் அதன் பிரதி சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை உறுதிப்படுத்துவதற்கு முன் வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையை கணக்காளரால் உறுதிப் படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி யில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 359,667,810 ஆன சேமிப்புக் கணக்கின் மீதி நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டதன் காரணமாக அப் பெறுமதியால் நடைமுறையல்லாச் சொத்தக்களின் மீதி அதிகரித்தும் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி குறைத்தும் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சேமிப்புக் கணக்கின் மீதி தொடர்ச்சியாக பல காலம் ரூபா 250 மில்லியனுக்கு மேற்பட்ட மீதியாக இருந்தமையால் அது நடைமுறைச் சொத்தின் கீழ் உரித்தல்லாதிருந்த மையால் நடைமுறை யல்லாச் சொத்தின் கீழ் கணக்கு வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களை உறுதிப்படுத்தவதற்கு முன் நடைமுறையல்லாச் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதை கணக்காளரால் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| பணிக் கொடை ஒதுக்கீட்டுப் பெறுமதி | 57,038 | 1,104,322 | 1,047,284 | 2025 இன் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களை உறுதிப்படுத்தவதற்கு முன் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையை கணக்காளர் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணப் பிரதேச அலுவகலத்தில் நிலையான வைப்புப் பெறுமதி | 2,657,318 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் நிலையான வைப்பு சான்றுதழின் பிரதிகள் | நிலையான வைப்பு காணப்படுகின்ற வங்கியில் இருந்து உரிய விபரங்கள் மீண்டும் பெறப்பட்டுள்ளது. அதன் பிரதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலையான வைப்புப் பெறுமதியை உறுதிப் படுத்திக் கொள்வதற்குரிய மீதி உறுதிப்படுத்தல் மற்றும் நிலையான வைப்புச் சான்றிதழின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 105.89 மில்லியனான கடன்கொடுத்தோர் பெறுமதியில் 04 வருடங்களை விஞ்சிய பெறுமதி ரூபா 31.25 மில்லியனாக இருந்ததுடன் உரிய கடன் கொடுத்தோர் மீதியை தீர்த்துவைப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதி அகற்றப்பட முடியாதிருந்ததுடன் கடன் கொடுத்தோரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சில தகவல்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் மூலதன நிதி ஏற்பாடுகளின் பற்றாக்குறையினால் செலுத்துவதற்கு முடியாதிருந்த மீதியாகும். | கடன்கொடுத்தோர் மீதியினை தீர்த்து வைப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவு | நிரற்படுத்தப்பட்ட வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தில்லாத விவாகமான உத்தியோகத்தரின் சம்பளத்தில் 12.5 சதவீதமும் விவாகமாகாத உத்தியோகத்தரிடமிருந்து 7.5 சதவீதம் அல்லது சிக்கன வாடகை அறவிட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக அம்பாறை ஹாட் உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்குரிய உத்தியோகபூர்வ இல்லத்திற்காக ரூபா 17, 31, 62, 92 மற்றும் ரூபா 125 ஆக வீட்டு வாடகை அறவிடப்பட்டதுடன் அறவிடப்படுகின்ற வீட்டு வாடகை 1984 ஆம் ஆண்டின் பின்னர் அதாவது 40 வருடங்களான அளவின் பின்னர் நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | உத்தியோகபூர்வ வீட்டு வாடகைக்காக புதிய மதிப்பீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு மாகாண மதிப்பீட்டாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் வீட்டு வாடகையை அதிகரிக்குமாயின் தொடர்ந்தும் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருத்தலை குறைக்க முடியும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோக பூர்வ இல்லங்களின் வாடகையை அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதியில் இருந்து அல்லது செயற்திட்டம் முழுமையடைந்த திகதியில் இருந்து 02 வருடங்களை விஞ்சிய சகல வைப்புக்களும் உரிய கணக்கிற்கு அல்லது வருமானத்தின் செலவு வைக்க வேண்டி யிருந்த போதிலும் அதற்கு முரணாக பெறுமதி ரூபா 1,437,593 ஆன காலாவதியான 07 வைப்புக்கள் கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 இன் இறுதிக் கணக்குகள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 02 வருடங்களை விஞ்சிய சகல வைப்புக்கள் தொடர்பாகவும் தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அரச நிதி சுற்றறிக்கை | | | |
| (i) | 2010 ஆகஸ்ட் 12 | நியதிச் சட்ட சபைகள், | எதிர்வரும் | பாதுகாப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் திகதிய இலக்கம் 445 என்ற சுற்றறிக்கை | அரச கூட்டுத்தாபனங்களுக்காக பாதுகாப்பு சேவையை பெற்றுக்கொள்ளும் போது அரசாங்கத்திற்குரிய பாதுகாப்பு சேவையை வழங்குகின்ற கம்பனிகளிலிருந்து முன் விசாரணை செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் 2024 மார்ச் 15 முதல் 2024 மார்ச் 14 ஆந் திகதி வரையும் மற்றும் 2025 ஏப்ரல் 15 முதல் 2026 ஏப்ரல் 14 வரையும் 02 தனியார் நிறுவனங்களிலிருந்து பாதுகாப்பு சேவை பெறப் பட்டிருந்தது. | ஆண்டிற்காக தேசிய போட்டியாளர் விலை கோரும் திட்டத்தின் கீழ் கூறுவிலை கோரப்பட்டுள்ளது. | சேவையை பெற்றுக் கொள்ளும் போது அரசாங்கத்திற்குச் சொந்தமான பாதுகாப்பு சேவையை வழங்குகின்ற கம்பனிகளிலிருந்து முன் விசாரணை செய்தல் வேண்டும். |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற என்ற சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) | மாகாண அல்லது பிரதேச அலுவலகங்களில் காணப் படுகின்ற நிறுவனத்தின் பொருள் மெய்மையாய்வு சபை அந்தந்த ஆண்டின் டிசம்பர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் நடாத்த வேண்டிய மற்றும் திசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் இயலுமான வரை விரைவாக அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கு உரிய நிறுவனத்தினால் பொருள் மெய்மையாய்வு சபை அத்திகதிக்கு முன்னர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை .<br><br>ஒவ்வொரு நிதியாண்டும் மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் பௌதீக பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பிரதான அலுவலகத்திலும், 16 பிரதேச நிலையங்களிலும் 2024 யூன் 30 ஆந் திகதி | தற்போது அந்தந்த நிறுவனங்களின் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுடன் சில நிறுவனங்களில் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு சபை நியமித்து குறித்துரைத்த திகதிக்கு முன் பொருள் மெய்மை ஆய்வு மேற் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஈ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் 5(1) ஆம் பிரிவு | சேவை முடிவுறுத்தப்பட்ட திகதியில் இருந்து 30 நாள் காலத்திற்குள் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 11 ஊழியர்களுக்கு 21 நாட்களுக்கும் 820 நாட்களுக்கும் இடையிலான கால தாமதத்தின் பின்னர் ரூபா 5.68 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | எந்தவொரு உத்தியோகத்தருக்கும் நடப்பாண்டின் போது மிகைக் கட்டணம் செலுத்துவதற்கு ஏற்படவில்லையென குறிப்பிடுகின்றோம். | பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம் பணிக் கொடை செலுத்துதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 121,947,713 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 97,086,919 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 219,034,632 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பராமரிப்பு செலவினம் மற்றும் ஏனைய செலவினங்கள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தின் சேமிப்புக் கணக்கில் திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 359,667,810 ஆன மீதி தொழில்படு மூலதன தேவைக்கான நிதி மீதியொன்றாக பேணிச் செல்லப்பட்டு மிகைப் பணம் குறுங்கால மற்றும் நீண்டகால முதலீட்டு வழிகளில் முதலீடு செய்வதன் மூலம் பெறக்கூடியதாக இருந்த வருமானம் நிறுவனத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | தற்போது 03 நிலையான வைப்புக்கள் பேணிச் செல்லப் படுவதுடன் மேலும் நிலையான வைப்புக் கணக்கொன்றைத் திறப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் நிறுவனத்திற்கு மிகவும் நலன் தரக்கூடிய வகையில் மேற் கொள்வதற்கு நிறுவனத்தின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நடைமுறை வேலையின் கீழ் குறிப்பிடப்பட்ட 08 செயற்திட்டங்களில் ரூபா 111,366,561 ஆன 07 செயற்திட்டங்கள் 04 வருடங்களுக்கும் 11 வருடங்களுக்கும் இடையிலான கால வீழ்ச்சில் இருந்து செயற்படுத்தப்படுகின்ற போதிலும் அந்த | பதிலளிக்கப்படவில்லை. | நடைமுறை வேலையின் கீழ் குறிப்பிடப்பட்ட செயற் திட்டங்களை எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்து எதிர்பார்க்கப் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | பட்ட நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப நிறுவன கட்டிடத்தில் ரூபா 39,444,781 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த புதிய நான்கு மாடிக் கட்டிடங்கள் 02 இன் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல் 2020 ஆம் ஆண்டில் இருந்து நிறுத்தப்பட்டதன் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட கிரயம் பயனற்றதாகியிருந்தது. | தற்போது இந்தக் கட்டிடம் இரண்டிலும் 10 சதவீத அளவு மிகுதி நிர்மாாணங்கள் இலங்கை இராணுவத்தின் ஊழியர் பங்களிப்பு மற்றும் ஆலோசனையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டங்களின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்து எதிர் பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மின்சார செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் 2017 - 2021 காலப் பகுதியில் தெஹிவளை மற்றும் மட்டக்குளி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ரூபா 19,076,807 மற்றும் ரூபா 20,584,622 செலவில் ஸ்தாபிக்கப்பட்ட சூரிய மின் கள முறைமைக்கு உரிய உள்ளகக் மின்சார வயர்கள் பொருத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை யின் காரணமாக அதற்காக செலவிடப் பட்ட கிரயம் 2021 ஆம் ஆண்டில் இருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | மூன்று சுற்று மின்சாரம் வழங்களைப் பெற்றுக் கொள்வதற்கோ ஒப்பந்த காரர் தெரிவு செய்வதற்கு 2025 இன் பெறுகை திட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டதுடன் அதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றது. | சூரிய மின் வலு சக்தி முறைமைக்கு உரிய உள்ளக மின்சார வயர்களை பொருத்தும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்து உரிய நலன்களை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | முறையான பிரகாரம் காணியின் உரித்தை உறுதிப்படுத்தாமல் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நான்கு மாடிக் கட்டிடத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 36,989,498 முற்பணத் தொகையும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 13,941,165 கொடுப்பனவும் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் முறையான பிரகாரம் அந்தக் காணியின் உரித்தை உறுதிப்படுத்தாமையின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும் காணியின் உரித்திற்காக தனியார் தரப்பினரால் தொடரப்பட்ட வழக்கு தீர்ப்பு 2023 ஒக்டோபர் மாதத்தில் கிடைத்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2025 யூலை 11 ஆந் திகதி வரையிலும் அரசாங்கத்திற்குரிய காணியைக் கையேற்கும் நடவடிக்கைகளை மேற் கொண்டு நிர்மாணங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கோ அல்லது முற்பண பணத்தை அறவிடுவதற்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் வழங்கப்பட்ட கட்டளையின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் உரிய நிலத்தில் நிர்மாணிப்பதற்காக முன்னரே யாழ்ப்பாண உயர்தொழில்நுட்ப நிறுவனத்திற்கு விடுவிப்பதற்கு முடியாதிருந்தது. | முறையான பிரகாரம் காணியின் உரித்தைக் கையேற்று நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |